| வடமேல் மாகாண கல்வித் திணைக்களம் - இரண்டாம் தவணைப் பரீட்சை 2018 | | |
|---|---|---|
| தரம் : 11 | **விடைகள்** | பாடம்: தமிழ் மொழி / දෙමළ භාෂාව |

## பகுதி I

| | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1) | [illegible] | 6) | 1 | 11) | 2 | 16) | 3 | 21) | 3 | 26) | 2 | 31) | 4 | 36) | |
| 2) | [illegible] | 7) | 4 | 12) | 2 | 17) | 2 | 22) | 4 | 27) | 1 | 32) | 1 | 37) | |
| 3) | [illegible] | 8) | 2 | 13) | 2 | 18) | 3 | 23) | 1 | 28) | 1 | 33) | 3 | 38) | |
| 4) | [illegible] | 9) | 4 | 14) | 3 | 19) | 3 | 24) | 4 | 29) | 4 | 34) | 4 | 39) | |
| 5) | [illegible] | 10) | 3 | 15) | 3 | 20) | 4 | 25) | 3 | 30) | 2 | 35) | 3 | 40) | |

(1x40=40 புள்ளி)

## பகுதி II

01 01. மென் + கால் + சிறை + அன்னம் + வீற்றிருந்த + மென் + மலரை + புன் + காகம் + கொள்ளத்தான் + போனால் + போல்
02. வைரமுத்து ஒரு கவிஞன் குலோத்துங்க சோழன் ஒரு மன்னன்
03. செயப்பாடு வினை
04. பிரதேசக் கிளைமொழி , சமூகக் கிளைமொழி
05. சின்னப் பிள்ளைக்கு என்ன ரூர். நீ துருதுரு என்று இங்கே நிற்கிறேன் என்று அங்கே நிற்பாய்.
06. * மை – அடிமை, பெருமை, தனிமை * படை – வெளிப்படை, அடிப்படை
07. வயோதிப காலத்தில் செலவு செய்வதற்காக பண் சேமிக்கப்படல் வேண்டும்.
08. • கூறியது கூறல் • முன்பின் முரணாகக் கூறல் • தெளிவின்றிப் பேசுதல்
குறுக்கிட்டுப் பேசுதல் • ஆதரமின்றி பேசுதல் • தகாத முறையில் வார்த்தைப் பிரயோகம்
09. கிரிஜா நாள் தோறும் பாடசாலைக்கு வருவாள்
மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர், கல்வி அதிகாரிகள், மற்றும் பெற்றேர்களும்
அவ்விழாவில் கலந்து கொண்டனர்
10. வேற்றுமைததோகை உவமைத்தொகை (20 புள்ளிகள்)

**02.** அ) சொற்பொழிவு
* தலைப்பு. – முதியோரைப் பேனுவோம்.
– முதியோர் இல்லங்களைத் தகர்த்திடுவோம்.
– சபையோரை விளித்தல், வணக்கம் கூருதல்.
– பேச்சின் உள்ளே தலைப்பு இடம் பெறுதல் வேண்டும்.
* உள்ளடக்கம். – முதியோர் என்போர் யாவர் என்பகன் விளக்கம்.
– முதியோர்களின் தேவையும் பெறுமதியும்.
– இளைஞருக்கும் முதியோருக்குமிடையிலான இடைவெளி.
– முதியோர்களின் இன்றைய நிலை.
– பிள்ளைகளின் கடமைகளும் பொறுப்புக்களும்

ஆ) விளக்கக் கட்டுரை.
* தலைப்பு.
– இயற்கை வளங்களில் காடுகள்.
– காட்டு வளம் பேணுவோம்.
– காடு செழித்தால் நாடு செழிக்கும்.
* உள்ளடக்கம்.
– இயற்கை வளங்கள்.
– இயற்கை வளங்களுள் காடுகள்.
– இன்று காடுகள் அழிவடையக் காரணம்.
– காடுகள் அழிக்கப்படுவதால் ஏற்படும் விளைவுகள்.
– எமது நாட்டிற்கே உரிய மரங்களும், மிருகங்களும், பறவைகளும் அழிந்துபோதல்.
– காடுகளை அழிப்பதைத் தடுக்க மேற்கொள்ளும் நடவடிக்கைகள்.

இ) * தலைப்பு
– பெண்கள் நாட்டின் கண்கள்
– பெண்கள் மீதான குற்றச் செயல்களை ஒழிப்போம்
– குற்றத்திற்கு தண்டனை
* உரையாடல் பாங்கில் எழுதுதல்
* உரையாடலில் இருவர் பங்கு பற்றுதல்
* உரையாடல் உடன் பாடாகவும் , எதிர் மறையாகவும் இடம் பெறல்
* உடன் பாடான கருத்துக்கள்
– பென்கள் மீதான குற்றச்செயல்கள்
– தண்டனை – மரண தண்டனையாக இருப்பின் ஏனையோருக்கு படிப்பினை
– சட்டம், ஒழுங்கு பேணப்படும்.
* எதிர் மறையான கருத்துக்கள்
– மதரீதியாக ஆராயப்படலாம்
– கொடிய தண்டனை வழங்கினாலும் குற்றங்கள் தொடர்ந்து கொண்டே செல்லல்
– குற்றவாளி திருந்தி வாழ வழியில்லை
– மரண தண்டனை வழங்காத நாடுகளும் உள்ளன

ஈ) சிறுகதை

* தலைப்பு – சாதியை ஒழிப்போம்
  – தனிமை
  – எல்லோரும் மானிடரே
* சிறுகதைக்குரிய அமைப்பு பேணப்படல்
* இயல்பான கதையோட்டம்
* முடிவு பொருத்தமாக அமைதல்

* குறிப்புக்களைக்கொண்டு கற்பனையாக எழுதப்படல்
* படிப்பினை மறைமுகமாக வெளிப்படுத்தப்படல்.

புள்ளித்திட்டம் :

# பொருளமைவும், அமைவும் – 12
# கருத்து வெளிப்பாடு மொழிச்செம்மை – 6
# எழுத்து நுட்பம் – 5
# தலைப்பு – 2

**03)** சுருக்கம்

* வேளான்மை நாகரிகத்தில் ஒவ்வொரு சிற்றூரும் தொழிநுட்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திறன் கொண்டதாக இருந்தது.
* அவர்களது தேவைக்கேற்ப தொழில் செய்வோர் கொண்ட சமுதாயமாக இருந்தது.
* தேவைகளைப் பூர்த்தி செய்யும் திறன் உள்ளதாக ஒவ்வொரு சிற்றூரும் அமைய வேண்டும்.
* அறிவியலும், தொழிநுட்பமும் மக்களிடத்தில் இடம் பெற வேண்டும்.
* அறிவியல் பார்வை விருப்பு வெறுப்புக்களை நீக்கா விட்டாலும் தளர்த்தும் தளர்த்தும் தன்மையுடையது.
* அது வலிமை மிக்கது.

(10 புள்ளிகள்)

**04)** 1. பிரிக்க முடியாத வகையில் தொடர்பு கொண்டுள்ளது.
2. சமூக முன்னேற்றத்திற்கு அடித்தளமாகவுள்ளது.
3. இன, மொழி, பண்பாடு, பழக்கவழக்கங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது.
4. .இன, மொழி, பண்பாடு, பழக்கவழக்கங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஓர் இடத்தில் கூடி வாழும் போது அவர்கள் ஓர் சமூகத்தினர் என்றழைக்கப்படுவர்.
5. இருதய மாற்று சிகிச்சை, செயற்கை முறையிலான கருத்தரிப்பு, சிறுநீரக மாற்று சிகிச்சை (பொருத்தமானவற்றிற்கு புள்ளி வழங்குக)

(10 புள்ளிகள்)

**05)** கடிதம்

- அமைப்பு - 4
- உள்ளடக்கம் - 8
- மொழி நடை - 3

* அமைப்பு – முகவரி – உள்முகவரி – தலைப்பு
  – உடல் – முடிப்பு – நன்றி - ஒப்பம்
* உள்ளடக்கம்
  குறைபாடுகள்
  – தமிழ் பேசும் மக்கள் தொகை – ஊரில் நிலவும் குறைபாடுகள்
  – நூலகத்தின் தேவையும், பயன்பாடும் – நூலகம் இருப்பின் ஏற்படும் நன்மைகள்

* மொழிநடை – பொருத்தமான மொழிநடை – நிறுத்தற்குறிப் பயன்பாடு

# பத்திரிகைச் செய்தி

* அமைப்பு – கவர்ச்சிகரமான தலைப்பு – பந்தியமைப்பு
  – விடயத்தொடர்ச்சி – முடிப்பு
* உள்ளடக்கம் – பாடசாலையின் பெயர் – போட்டிகள் பற்றிய விபரங்கள்
  – விழாவிற்கு வருகைதந்தோர் விபரம்
  – நடைபெற்ற போட்டிகளும் வெற்றியீட்டிய மாணவர்களும்
* மொழிநடை – பொருத்தமான மொழிநடை – நிறுத்தற் குறியீடுகள்
  – பிழையின்மை

(15 புள்ளிகள்)

## தமிழ் மொழியும் இலக்கியமும் iii
## விடைகள்

(01) (1) அ. அன்பில்லாமை
ஆ. • நாண வேண்டியவற்றிற்கு நாணாமை • நாட வேண்டியவற்றிற்கு நாடாமை
• பேண வேண்டிய நன்மைகளைப் பேணாமை
(2) அ. உவமை அணி (குன்றெனவே நிமிர்ந்தோங்கி குதுகலிக்கும் தோல்) ஆ. உழவன்
(3) அ. பாரி மகளீரால் கூறப்பட்டுள்ளது ஆ. அந்த மாதம் அந்த வெண்ணிலவில் தந்தை இருந்தார் குன்றும் இருந்தது
(4) அ. காசிம் ஆ. பயத்திலிருந்து விடுபட்ட நிலை
(5) அ. அரிச்சந்திரபுராணம். ஆ. லோகிதாசன்
(6) அ. புகழேந்திப் புலவர் ஆ. சோழ நாட்டின் நீர், நிலவளம் (சோழ மன்னனின் புகழ்)
(7) அ. பரதனால் குகனுக்கு
ஆ. குகன், உறவினர்களும், தேவர்களும் வணங்கும் படியாக நின்ற கோசலையைக் காட்டி இவர் யார் என்று வினவிய போது.

(8) அ. சிவ பெருமான் திரிகூடநாதர் ஆ. சந்திரன்

(9) அ. உவமை அணி

ஆ. உவமானம் : வண்ணாத்துப்பூச்சி பறத்தல்
உவமேயம் : விரல்கள் அச்சுப் பொறிக்கும் விதம்
பொதுத்தன்மை : அழகு (விவேகம்)

(10) அ. சுக்கு, மிளகு, திப்பலி

ஆ. • ஆசிரியர் இல்லாத ஊர் • மூத்தோர் இல்லாத அவை
• உணவைப் பகிர்ந்து உண்ணாதவர்கள் அயல் இருப்பு

(02) (1) I. தாழ்ந்த மனமுடையவர்கள், சோம்பியிருப்பவர் ஆடுபோல் தாவித்தாவிப் பல பொருட்களையும் நாடுபவர்கள், தம்மை வீழ்ச்சியடையச் செய்யும் இடையூறிற்குப் பயப்படுபவர்கள்.

II. தாழும் உள்ளம் (தாழ்வு மனப்பான்மை), சோர்வு ஆடுபோல் பல பொருள் நாடுதல், வீழ்ச்சியடையும் இடையூறிற்கு அஞ்சுதல்.

(2) I. இறந்தவர்களின் உடல் மண்ணில் புதையுண்டு செடிகளுக்கு உரமாகியும் அதன் மேல் மகன் உலாவித் தேயிலை கொய்யும் நிலையும்.

II. பிற உயிர்கள் வாழ வேண்டும் என்பதற்காகத் தான் உயிரைப் பணயமாக வைத்தல்.

(3) I. தொட்டிலில் ரத்த வெள்ளம் நிலா முகத்தில் தீப்பந்தம் என்பனவும் போரினால் ஏற்பட்ட அழிவுகளாகக் கொள்ளப்படுகின்றன.

II. ஏலம் பூப் போன்று வாசம் வாய்களில் எல்லாம் தீப்பற்றி எரிகிறது. காலவெள்ளத்தில் கனக்கும் மனநிலையும் கண்ணீரையும் சொரிவதாகப் பறம்பு மலை மக்களது துயரம் வெளிப்படுததப்படுகிறது.

(4) I. பேசும் வார்த்தைகள், இயல்பான ஒலி (பறவை, நீர்வீழ்ச்சிகளின் இரைச்சல்) இசை.

II. ஒலி முக்கியத்துவம் பெற்றுக் காட்சிப்படிமங்கள் இரண்டாவது இடத்துக்குத் தள்ளப்படும் போது சினிமா சீரழிந்து தாழ்ந்து தாழ்ந்த விடுகிறது.

(5) I. ஆடாதோடை, கொத்தமல்லி

II. மூத்தம்மா பிரசவம் பார்த்தால் குழந்தை சுகமாகப் பிறக்கும் என்பதாலே ஆகும்.

(03) (அ) சட்டசபைக்குத் தகுதியான பிரதிநிதித்துவத்தைத் தெரிவு செய்வதில் நாவலர் காட்டிய ஈடுபாடு

- நோயுற்ற நிலையிலும் கூட்டத்துக்குச் சமூகமளித்தமை
- தொய்வு நோயினாலும் பேச முடியாத , மூச்சு விட முடியாத நிலையிலும் கூட்ட நடைமுறைகளை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தமை
- பிறிற்றோ காட்சியினர் வெற்றி பெற முனையும் சந்தர்ப்பத்தில் கோபத்துடன் கம்பீரத்துடனும் எழுந்து வருகின்றமை.
  - கொடிய நோயால் வருந்திடினும் கூட்டத்துக்கே முக்கியம் கொடுத்தமை.
- பிறிற்றோவின் நேர்மையீனத்தை ஆதாரமாக நிறுவ முனைகின்றமை
  - எடுத்துக்கொண்டு வா தபாற் தந்திக் கட்டுகளை
- பிறிற்றோவின் தவறை வெளிப்படையாக சுட்டிக்காட்ட முனைகின்றமை.

(ஆ) நாவலருடைய ஈடுபாட்டைக் காட்டுவதற்குக் கட்டுரையாசிரியர் கையாண்ட உத்திகள்.

- நோயுற்ற நிலையிலும் கூட்ட நடைமுறைகளை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தமை.
  - சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்
  - வர்ணனைக் கையாள்கை
  - உயிர்த்துடிப்பு மிக்க வாக்கியங்களைப் பயன்படுத்தியுள்ளமை.
- பிறிற்றேவின் நேர்மையீனத்தை சுட்டிக்காட்ட முனையும் சந்தர்ந்தப்பத்தில் விறுவிறுப்பான உயிரோட்டமுள்ள மொழிநடையைக் கைக்யாண்டுள்ளமை
- கம்பராமாயணப் பாடல்களில் கட்டுரையாசிரிருக்கு இருந்த ஈடுபாடு காரணமாக அப்பாடலடிகளை பொருத்தமாகக் கையாண்டு நாவலரது கம்பீரம் , கோபத்துடன் எழுந்தமை ஆகியவற்றை தத்ரூபமாக வெளிப்படுத்தியிருக்கின்றமை
- அருநாந்திச் சிவாச்சாரியர் மாணவர்களுக்கு பாடம் கூறும் போது தமது வயிற்றுவலியை அங்கஸ்திரத்தில் தனியே எடுத்து வைத்து பாடம் நடாத்திய கதையை நாவலரது கூட்டத்தின் மீதான ஈடுபாட்டை வெளிப்படுத்த பொருத்தமாகக் கையாண்டமை.
- சம்பவத்தை கதைபோல் நகர்த்தும் பங்கு

அல்லது

(அ) மூத்தம்மாவின் குடும்ப அக்கறை

- தனது மகள் இறந்த பின்பும் தனது பேரப்பிள்ளைகளைப் பாதுகாக்கின்றமை
- குடும்பத்தினர் வினாக்கள் வினவும் போது கூட அக்கறையுடன் பதிலளிக்கின்றமை
- அக்கறையோடு பேரப்பிள்ளைகளுக்கு உதவுகின்றமை
  - இரவில் இயற்கை உபாதை தீர்க்க உதவுகின்றமை
  - நாவற்பழத்தை உப்பு நீரால் கழுவிக் கரிசனையோடு கொடுக்கின்றமை.
  - பால் கறந்து கொடுக்கின்றமை
  - தானே தயார் செய்த எண்ணெயை தலைக்குத் தேய்த்து விடுகின்றமை
  - உணவு ஊட்டி விடுகின்றமை
  - கதை சொல்லித் தூங்க வைக்கின்றமை
- பேரப்பிள்ளைகளின் கல்வியில் அக்கறையோடு இருக்கின்றமை
  - பேரப்பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புகினறமை

(ஆ) ஆளுமைப் பண்பு

- குடும்பத்தை பொறுப்பெடுத்து சுயமாகச் செயலாற்றுகின்றமை
- வயது முதிர்ந்த நிலையிலும் சவால்களை எதிர் கொண்டு செயலாற்றுகின்ற முனைப்புக் கொண்டிருக்கின்றமை
  - மகள் இறந்த நிலையிலும் பேரப்பிள்ளைகளை பொறுப்பெடுத்தல்
  - அவர்களது தேவைகளை நிறைவு செய்தல் • முன்மாதிரியாகச் செயற்படுகின்றமை
  - பேரன் முன்மாதிரியாக நினைத்தல்
  
  செயலாற்றுதல்
- வைத்தியத்தில் புலமை பெற்றிருக்கின்றமை

- சமூக பிரதிநிதியாகச் செயற்படுகின்றமை – கிராமத்து முடி சூடா ராணி
- நம்பிக்கை , திடசங்கற்பம், மனோதைரியம் உடையவளாய் இருக்கின்றமை
- இவரது இழப்பால் குடும்பத்தினர் , சமூகத்தினர் துக்கம் அடைகின்றமை

(04) I. பறம்புமலையின் அன்றைய நிலையும் இன்றைய நிலையும் அந்தமாகும் அந்த வெண்ணிலாவில் எங்களுவைய தந்தையும் எங்களுடன் இருந்தார் ; எங்களது மலையைப் பகைவர்கள் கைப்பற்றி விட்டனர்
(எள்ளும் வரகும் விளைந்துள்ள நாடு அருவிகளின் ஆர்ப்பரிப்பும் , கள்மனக்கும் குடிசைகள் , மலைப்பூக்கள் நிறைந்து கானப்படல்)

II.
- பாரிமன்னனின் சிறப்பு • முல்லைக்கு தேர்கொடுத்தல்
- பாரிமன்னன் கபிலர் , ஔவையார் ஆகிய லவர்களின் அன்பு கொண்டவர்
- சிறந்த ஆட்சியை மேற்கொண்டவர் • பாசமுள்ள தந்தை

அல்லது

(அ) நாட்டு வளம்
- எருமைகளை நீராடும் துறைகளுடைய நாடு
- மரங்கள் , வாழை மரங்கள் , தாழைகள், செழிப்புற்று விளங்குதல்
- மாதம் மும்மாரி பொழிதல், வருசம் மூன்றும் விளைச்சல்கள் கானப்படுதல்
- கரும்பு செந்நெல்லும் நெருங்கிக் காணப்படுதல்
- மாம்பழக் கொத்துக்கள் தூங்கிக் கிடத்தல்
- வீடுகளில் தயிர் கடையும் மத்துக்கள் சூழலுதல்

(ஆ) திரி கூடநாதரின் சிறப்பு
- வளைந்த இளம்பிறைச் சந்திரனைச் சடா முடியில் அணிந்த அழகர்.
- அடியவர்களுக்கு அருளுகின்ற கொடைத்தன்மை உடையவர்
- நாத தத்துவத்தின் மெய்பொருளாக அரி, அயன், அரசன், என மூன்று வகையாக விளங்குபவர்

(05) I. குகனின் சிறப்பு கூறப்படும் விதம்
- பரதனையும் பரதனோடு வந்தவர்களையும் தொழுகின்றான்
- அவர்கள் யாராரென விசாரித்து மரியாதை செய்கினறான்
- இராமனின் தாயாராகிய கோசலையை படிமிசை விழுந்து தொழுகின்றான்
- மலைகளைப் போன்ற தோள்களையும் களிறு போன்ற வீரத்தையும் உடைய வீரன்
- இராம, இலக்குவணருடன் தோழனாகவும் சகோதரனாகவும் இணைந்து கொண்டவன்
- இரக்கமற்ற கைகேயியையும் தாயென தொழுதவன்

II. பாடலில் கையாளப்பட்டுள்ள உத்திகள்
- இராமனின் குடும்ப உறுப்பினர்களைக் குகனுக்கு அறிமுகம் செய்து வைப்பதினூடாக அவர்களின் குணப்பண்புகள் சித்தரிக்கப்படுதல்
- உவமை, உருவக அணிகளினூடாக விடயம் கூறப்படுதல்
- பரதன், குகன் போன்றோரின் உயர்வு சிறப்பிக்கப்படுதல்

(06) I.
- பெரிய பரிதாபத்தின் முழுமொத்த வடிவமாய் என் முன்னே நின்றான்
- என் இதயம் கழன்டு அவன் இட்ட ஒப்பந்தத்தின் மேல் விழுந்து கத்தியது பின் கருகிப்பற்றியது
- வருங்காலம் காதல் உணர்வுகளை என்னவென்று ஒருத்திக்கு எழுதுவான்
- காகம் போல் அவன் விழுந்தவனின் வேலி ஓரமெல்லாம் கரைந்து திரிவானோ
- வந்திருக்கக் கூடாது அவன் இன்று அலுவலுக்கு……

II.
- அவன் எதிர்காலத்தில் உள்ளத்து உணர்வுகளை வெளியிட முடியாமை (காதலிக்கு கடிதம்)
- ஆற்றலை வெளிப்படுத்தி வளர்ச்சியடைய முடியாமை
- அந்த நதி வரும் நாளில், சீறி ஒலியெழுப்பி ஓடாது, உறையும் சிறு துளியாய்

(07) I. நன்மை
கணிப்பொறி ஒரு இராட்சத வேலைக்காரன் செல்லும் வேலைகளை எல்லாம் கச்சிதமாகச் செய்யும் வீட்டுக் கணக்குகள் பதியலாம். படங்கள் கீறலாம், கேம்ஸ் *விளையாடலாம்* , கதைகளை ரைப் செய்து சேமித்து வைத்து வேண்டிய நேரம் எடுக்கலாம். காகிதம் மிச்சப்படும். சுற்றுச் சூழலுக்கு நன்மை ஏற்படும் திருத்தங்களை கம்பியூட்டரில் ஒரேயடியாகச் செய்யலாம் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக டைரக்டரி உண்டாக்கி தேவையான விடயங்களை சேமித்து வைக்கலாம், நகல் எடுக்கலாம், கத்தரித்து ஒட்டலாம், விடயங்களை தேடி எடுக்கலாம் அழிக்கலாம் எழுத்துக்களை பெரிதாக்கலாம், சிறிதாக்கலாம் சொற் பிழைகள் ஏற்பட்டால் அழித்து சரி செய்யலாம். கணிப் பொறியில் கட்டளை கொடுத்தல்…………….

தீமை
தவறான கட்டளைகளைக் கொடுத்தால் தானே எஜமானாகிவிடும். சேமித்து வைக்காவிட்டால் டைப் செய்த விடயங்களை அப்படியே அழித்து விடும். சொன்னதையே திருப்பத் திருப்ப சொல்லிக் கொண்டே இருக்கும்.

II. இலகுவான மொழி நடைக் காட்சி ஈதாசிரியரே கதை கூறுவதாக பிரதான பிரதான கதாப்பாத்திரமாக கதை படைக்கப்பட்டுள்ளது. பேச்சு வழக்குச் சொற்களின் கையாட்சி ஆங்கிலப்பதங்கள் அதிகமாக கையாளப்பட்டுள்ளது. உவமை அணிகள் பல கையாளப்பட்டுள்ளது. கதைக்குள் கதை கூறும் உத்தி பயன்படுத்தப்பட்டுள்ளது.
உரையாடல் பாங்கு காணப்படுகிறது.
உதாரணங்கள் எடுத்துக்காட்டல்.